# குகதாசன் சாரங்கபாணி, BEng



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் **1972** முதல் **1980** வரை கல்விகற்றிருந்தேன். பாடசாலை மாணவ முதல்வராக பதவி வகித்ததுடன் **1980** இல் நடைபெற்ற தேசிய மட்டத்திலான விஞ்ஞானப் புதிர் போட்டியில் (**Science Quiz Contest**) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலிடம் பெற்றபோது அந்த அணியிலும் அங்கம் வகித்திருந்தேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் கனடாவில் **நிர்வாகக் குழு உறுப்பினர், உப பொருளாளர், செயலாளர், தலைவர்** ஆகிய பதவிகளை வகித்துள்ளேன். செயலாளராகப் பொறுப்புவகித்த காலப்பகுதியில் எமது சங்கம் இரண்டு வழக்குகளை எதிர்கொண்டிருந்தது. **Human Rights Tribunal of Ontario, Superior Court of Justice – Ontario Divisional Court** ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்டிருந்த இந்த வழக்குகளை எதிர்கொள்ள வழக்கறிஞரை நாடினால் சங்கத்தின் பணம் விரயமாகும் என்பதனால் நானாக முன்வந்து சங்கத்தின் சார்பாக வழக்குகளை எதிர்கொண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் கனடாவிற்குச் சார்பான முறையில் வழக்குகளை வெற்றிபெற்றுத் தந்திருந்தேன். எமது சங்கத்தின் தமிழ் மாணவர் உதவித் திட்டத்தின் செயற்குழு உறுப்பினராகப் பங்காற்றியபோது எனது முக்கிய பங்களிப்புகளில் ஒன்றாக கிழக்கு மாகாணம் நோக்கி தமிழ் மாணவர் உதவித் திட்டத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தியதைக் குறிப்பிடலாம்.

எமது சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் முறையானதும் வெளிப்படைத் தன்மையானதுமான நிதித் திட்டமிடல்களைப் பயன்படுத்தி சங்கத்தின் நிதி நிலைமையைச் சீராக்கி, பேண்தகுநிலைநோக்கி (**Sustainable Condition**) வழிநடத்திச் சென்றேன். இக்காலப்பகுதியிலேயே நிர்வாகசபைக் கூட்டங்களின் அறிக்கைகளை சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்புவதையும் நடைமுறைப்படுத்தி வெளிப்படைத் தன்மையான பொறிமுறையையும் ஆரம்பித்தேன். எமது சங்கத்தின் ஜனநாயகத் தன்மைக்கும், காத்திரமான செயற்பாடுகளுக்கும் எமது ஆயுட்கால உறுப்பினர்களை அதிகரிக்கவேண்டும் என்கிற புரிதலில் செயற்பட்டு இவ்வாண்டு ஆயுட்கால உறுப்பினர்களையும் அதிகரித்திருந்தோம்.

இவ்வாண்டில் நாம் முன்னெடுத்த வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கோரல், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் ஒன்றிணைப்பதற்குமான பொறிமுறைகளைக் கண்டடைதல் ஆகியவற்றை மேம்படுத்தவும் **ஆற்றலுள்ள அடுத்த தலைமுறையிடம்** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் – கனடாவைக் கையளிக்கவுமாக இந்தத் தேர்தலில் தலைவர் என்கிற பொறுப்பினை மீளவும் நான் ஏற்பதற்கான உங்கள் ஆதரவினை வேண்டி நிற்கின்றேன்.